195—

மேட்டுப்பாளையத்தில் கலைக்கல்லூரி துவங்குதல்

*** 39975—**திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மேட்டுப்பாளையத்தில் ஒரு கலைக்கல்லூரி தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் தாலூகா தலைநகராகவும், நீலகிரி மாவட்டத்தினுடைய நுழைவாயிலாகவும் இருக்கிறது. அன்னூர், புளியம்பட்டி, காரமடை போன்ற பெரிய பஞ்சாயத்து யூனியன்களில் குறைந்தது 20 இலட்சம் மக்கள் தொகை உள்ளது. இவ்வளவு மக்களின் தலைநகரமாக மேட்டுப்பாளையம் இருக்கின்ற நிலையில் சுமார் 40 கிலோ மீட்டர் தூரத்தில் வந்து கலைக்கல்லூரியில் படிக்கவேண்டிய சூழ்நிலை அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கிறது. அங்கிருந்து சுமார் இரண்டாயிரம், மூன்றாயிரம் மாணவர்கள் தினசரி இரயில்களிலும், பேருந்துகளிலும் பயணம் செய்து கல்லூரிக்குச் செல்கிறார்கள். எனவே இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த நிதியாண்டிலாவது ஒரு கலைக் கல்லூரியை அங்கே ஆரம்பிக்கும் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் இந்தத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரிகள் நான்கும், அரசு உதவி பெறும் கல்லூரிகள் எட்டும், சுயநிதிக் கல்லூரிகள் பன்னிரண்டும், ஆக 24 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. ஆகவே அங்கே மேலும் அரசு கல்லூரி தொடங்கவேண்டும் என்ற அவசியம் எழவில்லை. அரசின் நிதிநிலை காரணமாக புதிய அரசு கலைக்கல்லூரிகள் துவங்குவதற்கு தற்போது வாய்ப்பு இல்லை.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

1995 ஏப்ரல் 3]

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே ஆற்றிய முதல் உரையிலேயே கூட மேட்டுப்பாளையத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளேன். மேட்டுப்பாளையம் நகரத்தைச் சுற்றி சுமார் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளடக்கிய பல கிராமங்கள் உண்டு. பல பெரிய சிறிய தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர். மேலும் மலைவாழ் மக்கள், அரிசன மக்கள் அதிக அளவில் உள்ளனர். தற்சமயம் அவர்களுடைய குழந்தைகள் கோவைக்குத்தான் கல்லூரிக்காகச் செல்ல வேண்டியுள்ளது. வசதியற்ற அவர்கள் உயர் கல்வியைப் பெற முடியாத சூழ்நிலை உள்ளதால் அரசு சார்பில் ஒரு கலைக் கல்லூரியையோ அல்லது தொழில் நுட்ப கல்லூரியையோ அரசு அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கல்வி நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன. அந்த மாவட்டத்திலே இருக்கிற மக்கள் பயன் பெறுகிற வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வசதியற்றவர்களுக்காகத்தான் அங்கே அரசு 4 கலைக் கல்லூரிகளை நடத்திக் கொண்டிருக்கிறது. அரசு கலைக் கல்லூரியே இல்லாத மாவட்டங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து எங்கெங்கே வாய்ப்பு இருக்கின்றதோ அங்கே தொடங்கத்தான் அரசு முயற்சி எடுக்க முடியும். கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் அரசு கலைக் கல்லூரி தொடங்குகின்ற வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 196, திரு. என்.ஆர் .சிவபதி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

196—

திருச்சி மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை அமைத்தல்

***36531—**திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டியம் ஒன்றியம், மணமேடு கிராமத்தில் திருச்சி மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,